திருவள்ளுவர் ஆண்டு 2034

# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி : 12 தொகுதி : 97 டிசம்பர் 2003

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர்: இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர்: இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

பகுதி : 12
தொகுதி : 97
*டிசம்பர்* 2003

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 419

திருவெம்பாவை 421
*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

நன்னூல் கூழங்கைத் தம்பிரான் உரை 425
*முனைவர் பெ.சுயம்பு*

தமிழைச் செவ்வியல்மொழி என
அறிவிப்பதில் நமக்கும் பங்குண்டு 436
*தமிழண்ணல்.*

வள்ளுவத்தில் இயற்பியல் கூறுகள் 442
*பேராசிரியர் மெ.மெய்யப்பன்*

புதிய யுகத்தின் பிள்ளையார் சுழி 446
*டாக்டர் ம.ரா.போ.குருசாமி*

பெண்ணின் பெருமை 453
*பேராசிரியர் கி.இளங்கோவன்*

# இதழ்மணம்

தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்க்கை, வழிபாடு நாகரிகம் என்ற நடைமுறை தமிழ்ச்சைவம் தழுவியதாகும்; இது தவிர்ந்த தமிழ்மக்கள் தமிழ் வைணவப் பாரம்பரியத்தைத் தழுவிய நடைமுறை வாழ்க்கையினர். எனவே தமிழ் மக்களைத் தமிழ்சார்ந்த பன்னிரு திருமுறை, திவ்வியப்பிரபந்த தத்துவ இயல் வழிச்செல்லும் மக்கள் இனம் எனக்கொள்வது பொருத்தமாகும்.

மண்ணோடும் மண்ணின் மைந்தர்களோடும் நீண்ட தொடர்புடைய பன்னிருதிருமுறைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் பன்னிருதிருமுறை மன்றம் ஒன்றை அறிஞர்பெருமக்கள், அருட்பெருந்தகை நீ.சீனிவாசம் பிள்ளை அவர்கள் முயற்சியால் தொடங்கினர். அம்மன்றம் இந்த ஆண்டு டிசம்பர்த் திங்களில் பொன்விழா எடுத்துப் போற்றியது பாராட்டுக்குரிய அரிய நிகழ்ச்சியாகும்.

பன்னிருதிருமுறை மன்றம் நாளும் பக்திப்பயிர் தழைக்க ஆற்றி வரும் தொண்டு அளப்பரியதாகும். தேவார இசைமுழங்க அன்பர்திருக் கூட்டத்துடன் ஆடிவீதிவலம் வருவதும், இல்லங்கள் தோறும் சென்று பன்னிரு திருமுறைப்பாடல்களைப் பாடி விழா எடுப்பதும் தமிழ்மக்களுக்குத் திருமு.றைப்பாக்களை வீடுதேடிச் சென்று பயிற்றுவிப்பதும் தமிழ்ப்பாரம்பரியத்தைப் பேணும் தொண்டாகும்.

இத்தகைய மன்றம் ஆடிவீதியில் உள்ள சுற்று மாளிகையில் ஒரு சிறிய அறையில் அமைந்து பணிசெய்கிறது. இம்மன்றத்திற்குப் பெருமன்றம் அமைப்பது தமிழ் மக்களுக்கும் கோயிலுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

பன்னிருதிருமுறை மன்றச் செயலர் திரு.நீ.சீ. சுந்தரராமன் பெரும் கல்வியும் அரிய முயற்சியும் உடைய அருட்செல்வர். அவர்கள் மதுரை நகரில் ஆற்றிவரும் பணிக்குக் கிடைத்த மரியாதையே பொன்விழா நிகழ்ச்சியின் வெற்றியாகும். அவர்களும் மன்றப்புரவலர்களும் பொன்விழா மாளிகை அமைத்துச் சைவத்தமிழ்ப் பணியைப் பல்லாற்றானும் தொடர வாழ்த்துவோம்.

இந்த இதழில் பேராசிரியர் சுப.அண்ணாமலை, பேராசிரியர் பெ.சுயம்பு, பேராசிரியர் தமிழண்ணல், பேராசிரியர் மெ.மெய்யப்பன், பேராசிரியர்

ம.ரா.போ. குருசாமி, பேராசிரியர் கி.இளங்கோவன் ஆகிய பெருமக்கள் கட்டுரை அளித்துள்ளனர்.

புதிய வரவாகப் பேராசிரியர் மெ.மெய்யப்பன் அவர்களுடைய "வள்ளுவத்தில் இயற்பியற்கூறுகள்" என்னும் கட்டுரை இடம் பெற்றுள்ளது. திருவள்ளுவருடைய தெய்வத்தன்மையை நினைத்து வியக்கும் நாம் இக்கட்டுரையில் அவருடைய அறிவியல் போக்கும் நோக்கும் அவற்றின் ஆழமும் திட்பமும் கற்பவர் சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருப்பதைக் கண்டு இன்புறலாம். தொட்டனைத்தூறும் மணற்கேணி என்றும் அறிதோறும் இன்பம் பயப்பது என்றும் அறிவை எடுத்துரைக்கும் வள்ளுவம் அத்தகைய கருத்துக் கருவூலமாக இருப்பதைப் பேராசிரியர் மெய்யப்பன் தெள்ளிதின் விளக்கியுள்ள நுட்பம் கற்று இன்புறத்தக்கது.

"புதிய யுகத்தின் பிள்ளையார் சுழி" என்னும் கட்டுரை பேராசிரியரின் கனிந்த பக்குவ வெளிப்பாடாகும். தேர்ந்த சொற்களால் சிறந்தது பயிற்றல் என்னும் நுட்பம் கட்டுரையில் கண்டு பயிலுதற்குரியதாகும்.

பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள், "தமிழைச் செவ்வியல் மொழி என அறிவிப்பதில் நமக்கும் பங்குண்டு" என்னும் கட்டுரை நம் குறைகளை ஆய்வதாக அமைந்துள்ளது. உண்மை காண்பது அண்ணல் வழக்கம்; அறன் அறிந்தமூத்த அறிவினர் சொல்லாகை யால் திறன் அறிந்துகொள்ளுதல் அரசியலாரின் கடப்பாடாகும்.

பேராசிரியர் பெ.சுயம்பு அவர்களுடைய "நன்னூல் கூழங்கைத் தம்பிரான் உரை" ஆய்வு தமிழ் உலகம் ஊன்றி நோக்க வேண்டிய அரிய இலக்கணக் கட்டுரையாகும். மாணவர்களும் ஆசிரியர்களும் தமிழ் இலக்கணப்பரப்பையும் ஆழத்தையும் இக்கட்டுரையில் வரிதோறும் காணலாம்.

பேராசிரியர் கி.இளங்கோவன் சிலப்பதிகாரத்தைப் பெண்ணின் பெருமையாகப் படைத்திருக்கிறார்கள். கற்று இன்புறுக. பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவையின் பத்தொன்பதாம் திருப்பாட்டுக்கு அளித்துள்ள விளக்கம் தத்துவ விளக்கம் மட்டுமல்ல; அவருடைய முதிர்ந்த அருள்ஞான அனுபவமாகும்.

மொத்தத்தில் இந்த இதழ்மணம் தமிழ் மணமாக எங்கும் பரவ அன்பர்கள் உதவுவார்கள் என நம்புவோம்.

# திருவெம்பாவை - 19

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

சிவபெருமான் திருவடிக்கு அயராத அன்புடன் ஆட்பட்ட மணிவாசகர், "மீளா அடிமை உனக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாமே ஆளாயிருக்கும் அடியார்" என்று சுந்தரர் கூறியதுபோல், அவனுக்கே மீளாத அடிமையாகிப் பிற தெய்வங்களையும், பிறர் எவரையும், எதற்காகவும் நினைக்காதவர் ஆனார். இந்த வைராக்கியத்தைப் பாவைநோன்பு இருக்கும் மகளிரின்மேல் ஏற்றி, அவர்கள், 'சிவனடியாரைத் தவிர வேறு யாருக்கும் தாங்கள் வாழ்க்கைப்படக் கூடாது' என்று, சிவபெருமானிடம் வரம் கேட்பதாகப் பாடுகின்றார். இப்பாட்டும், பாவை நோன்புப் பெண்கள் நல்ல கணவர் வேண்டும் என்று வரம் வேண்டும் வழக்கத்தை ஒட்டியே பாடப்படுகின்றது.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே" என்ற திருப்பாட்டில், மகளிர் சிவனடியார்க்குப் பணிசெய்யும் பாக்கியத்தைத் தரும்படி வேண்டினர். இப்போது, கணவரின் இசைவோடு, சிவபெருமானுக்கே உறைப்போடு பணிசெய்ய வேண்டும் என்று அழுத்தமாக வரம் வேண்டுகின்றனர். உள்ளத்தின் பக்குவமுதிர்ச்சியை இது காட்டும்.

பழங்காலத்தில் பெண்ணுக்குத் திருமணம் செய்யும்போது, அவள் பெற்றோர், அவளை மணமகனிடம் ஒப்புவித்து, "எங்கள் மகளாகிய இவள் உனக்கு அடைக்கலம், நீ இவளை நன்றாகப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறுவர். இதே சொல்லைத் தமது திருமணத்திலும் சொல்லித் தம்மைக் கணவராவாரிடம் ஒப்புவிப்பார்களே; இவ்வடைக்கலச்சொல் மற்ற பெண்களுக்குச் சரியே; ஆனால் சிவனைத் தவிர வேறு நினைவில்லாத தமக்கு, வரப்போகின்ற கணவர், சிவனடிக்கு அன்பு இல்லாதவரானால், அவர் கருத்துக்கு மாறாக நடக்க முடியாத நிலை உண்டாகி, சிவத்தொண்டு செய்ய இயலாமல் போகுமே; அப்போது வாழ்க்கை பயனற்றுப் போகுமே; என்று இந்த மகளிர் அஞ்சுகின்றனர். இந்த அச்சத்தை நீக்குமாறு சிவபிராணிடம் விண்ணப்பித்துக் கொள்கின்றனர்.

"உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்; உனக்கு ஒன்று உரைப்போம், கேள்"

என்று தொடங்குகின்றவர். தமது விருப்பத்தை நிறைவேற்றும் கடமை இறைவனுக்கு உண்டு; அவனையன்றி யாரிடமும் எதுவும் வேண்டார் என்பார். "எங்கள் பெருமான்" என்றனர். சொல்லப்போவது தம் வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியமான செய்தி என்பார். "உனக்கு ஒன்று உரைப்போம்" என்றவர். எமது இல்லற இன்பத்தைச் சிவனடியாருடனே பெற விரும்புகிறோம். ஆதலால் அவரைத் தவிர வேறு யாரும் எம் கணவராக வரக்கூடாது.

"எம் கொங்கை நின் அன்பரல்லார் தோள் சேரற்க" என்று உறுதியாகப் பேசுகின்றனர்.

கன்னியர்க்கு இல்லறம் வேண்டும். அது சிவன் சார்புடைய இல்லறமாதல் வேண்டும். சிற்றின்பம் பேரின்பத்திற்கு வழிவகுக்க வேண்டும். இல்லையேல், அது பொருளற்றதாகும். வாழ்வின் பயன், சிவபிரானை உணர்ந்து வழிபட்டு, அவனைத் தரிசனம் செய்து வீடுபேறு அடைவதே. இக்குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே இந்தப் பெண்கள் இவ்வாறு வரம் கேட்கின்றனர்.

அடுத்து, இல்லறத்தில் தாங்கள் செய்யும் பணியெல்லாம் சிவப்பணியாகவே அமையவேண்டும் என்று வரம் வேண்டுகின்றனர். அறப்பணி செய்வதும், இச்சிவப்பணி செய்வதும் வேறுவேறு. அறப்பணி நன்மையைத் தருமாயினும், நல்வினைப்பயனாகி, மீண்டும் பிறவிக்குக் காரணமாகும். ஆனால் சிவப்பணி, சிவனது அருளைப்பெற்று, "சிவனுக்காக" என்று செய்யப்படும் அறப்பணி. ஆதலால் இது வினைப்பயனைத்தராது. வீடுபேற்றுக்கு வழிவகுக்கும். ஆகவே இந்தப்பெண்கள் இத்தகைய சிவப்பணி தவிர வேறு எதையும் தாம் செய்யக்கூடாது என்பர்.

"எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க" என்று மீண்டும் அழுத்தமாகப் பேசுகின்றனர்.

இன்பத்தைச் சிவனடியார்க்கு ஆக்கி, இனிதே செய்யும்

பணியைச் சிவனுக்கே ஆக்கி, வாழ்வைச் சிவன் சார்பிலேயே வாழவிரும்பும் இந்தப் பெண்கள், அடுத்து மிக்க பெரிய வரத்தையும் இறைவனிடம் கேட்கின்றனர். ஐம்புலன்களுக்கும் பெருவிருந்தாக எத்தனையோ பொருள்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகில் அவற்றுள் எதையும் புலன்களால் நுகர்ந்துஇன்புற விரும்பவில்லை அவர்கள். யாரும் காண்பதற்கு அரிய காட்சியாகிய சிவதரிசனத்தையே விரும்புகின்றனர். மணிவாசகர் தமது பக்தி முதிர்ச்சியையும், சிவதரிசன வேட்கையையும் இப்பெண்கள் மீது ஏற்றிப்பாடுகின்றார். ஆதலின், அவர்களின் கூற்றாக, இந்த அரியவேண்டுகோள் வருகிறது.

இறைவா, நாங்கள் உன்னையே வழிபட்டு, உன் பணியே செய்து, அந்த அளவில் நில்லாமல், உன்னைக் காணவேண்டும், உன்னை உள்ளவாறு காண நீ எழுந்தருள வேண்டும். ஒருமுறை தோன்றி மறைந்து விடலாகாது. மீண்டும் மீண்டும் உன்திருக்காட்சி தரவேண்டும். எங்கள் கனவிலும் நீ தோன்றியருளவேண்டும். உன்னைத்தவிர வேறு எதையும் நாங்கள் காணக்கூடாது. என்னும் பொருள்பட,

"கங்குல் பகல் எம் கண் ஒன்றும் காணற்க"

என்று வேண்டுகின்றனர். பெறுவதற்கு அரிய இந்தப் பாக்கியத்தைப் பெறுவதற்கு இல்வாழ்க்கை தடையாக இருக்கலாகாது என்பதற்காகவே சிவனடியாரோடு தம் இல்லறம் அமையவேண்டும் என்று வேண்டினர்.

"எங்கள் இறைவா, எம் விருப்பம் நிறைவேற அருள்வாயானால் சூரியன் எந்தத் திசையில் உதித்தாலும் எமக்கு வரக்கூடிய தீமை ஒன்றுமில்லை"

"இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்"

கிழக்குத் திசையில் உதிக்கும் சூரியன் வேறுதிசையில் உதித்தாலும் உலகிற்குத் தீமை உண்டாகும். சிவதரிசனம் பெற்றால் அந்தத் தீமையையும் நீக்கக்கூடிய ஆற்றல் எமக்கு உண்டாகும். ஆதலால் எமக்குக் கவலையில்லை என்று கூறுகின்றனர். சிவபிரானின் அருளே பெருஞ்செல்வம். அதனை உடையார் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லையன்றோ?

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்
போக்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள்
சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ
ரெம்பாவாய்.

# நன்னூல் கூழங்கைத் தம்பிரான் உரை

முனைவர் பெ.சுயம்பு
தமிழ் இணைப்பேராசிரியர்,
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

## பேராசிரியர் தாமோதரன் அரும்பணி

தமிழ் இலக்கண நூல்களுள் மக்களிடையே பெரும் செல்வாக்கு உடையது நன்னூல். இந்நூலுக்குப் பலர் உரை விளக்கம் தந்துள்ளனர். மயிலை நாதர், ஆண்டிப் புலவர், சங்கர நமச்சிவாயர் போன்றோர் எழுதிய உரைகள் தமிழுலகத்தில் ஏற்கனவே அறிமுகமாகிப்பயிற்சிக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப் பட்டுள்ளன. ஆயினும் கடந்த இருநூறு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பெற்று, மக்களிடையே அறிமுகப்படுத்தப்பெறாது, மறைந்து கிடந்த உரை ஒன்று அண்மைக்காலத்தில் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. கூழங்கைத் தம்பிரான் என்ற தமிழறிஞரால் எழுதப்பெற்ற உரையே அது.

கூழங்கைத் தம்பிரான் (1699-1795) காஞ்சியில் பிறந்தவர்; தஞ்சையில் வாழ்ந்தவர்; ஈழத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து மறைந்தவர். பதினெட்டாம் நூற்றாண்டில் இவர் எழுதிய நன்னூல் உரை பிரிட்டிஷ் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனைப் பேராசிரியர் முனைவர் அ.தாமோதரன் பெற்று 1980 இல் செருமனியில் பதிப்பித்து வெளியிட்டார். சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 1998 இல் மறுப்பதிப்புச் செய்துள்ளது.

பேராசிரியர் தாமோதரன் செருமனியிலுள்ள ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்துத் தெற்காசிய நிறுவனத்தின் கல்விப் பணியில் தம்மை இணைத்துக் கொண்டவர். கையெழுத்துப் படியாக இருந்த தம்பிரான் உரையைச் செப்பம் செய்து வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்த பெருமைக்கு உரியவர். தமது பதிப்புப் பணிகுறித்துப் பதிப்புரையில் விவரித்துள்ளார். அவ்வுரையில் ஒரு பகுதி வருமாறு.

"காலக் கோலத்தினால் இந்திய மண்ணிலிருந்து பயணமாகி ஐரோப்பிய நூலகங்களில் குடியேறிவிட்ட எண்ணற்ற தமிழ்ச் சுவடிகளுள் ஒன்றே 'நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்' ஆகும். இது பிரிட்டிஷ் நூலகத்தின் (The British Library) கீழ்த்திசைப் பகுதியில் (Oriental Department) பத்திரமாக இருக்கிறது. இந்த நூலகத்தின் கையெழுத்துப் பட்டியலில் (Handlist/ Nannul a Tamil Grammar) என்ற பெயரில் Oriental 2724 என்ற எண்ணுடன் பதிவாகியுள்ளது. சிதைவு சிறிதுமின்றி நன்றாகப் 'பைண்டு' செய்து வைக்கப் பட்டுள்ளது.... இடையிடையே சிற்சில இடங்களில் வேறு மையினால் திருத்தப்பட்டிருக்கிறது. இது ஓலைச் சுவடியோ அல்லது ஆசிரியரின் மூலக்கையேடோ (Autograph) அல்ல."

மேலும், கூழங்கையார் எழுதியுள்ள உரை நூலின் இயல்பு குறித்தும் அதனைப் பதிப்பிக்குங்கால் தாம் மேற்கொண்ட பணி குறித்தும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதில் சில பகுதி:

"இந்தச் சுவடியில் பாயிரம் தொடங்கிப் பதினான்காவது சூத்திரம் வரையில்தான் மூலமும் உரையும் எழுதப்பட்டுள்ளன. பின்னர் நூலிறுதிவரை மூலமின்றிப் பதவுரை மட்டுமே எழுதப்பட்டுள்ளது. 'நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும்' என்று நூலின் பெயர் குறிப்பிட்டிருப்பதாலும் ஒரே முறையாக இருக்கவேண்டு மென்ற நோக்கத்தாலும் மயிலை நாதர் உரை (1918)யை யொட்டிப் பதவுரையின் உதவி கொண்டு நூல் முழுவதும் இப்பதிப்பில் மூலம் தரப்பட்டுள்ளது. சிறப்புப் பாயிரம் தொடங்கி இயல்தோறும் தனித்தனியே சூத்திரங்களுக்கு இச்சுவடியில் எண்ணிடப்பட்டுள்ளது. வழக்கத்தைப் பின்பற்றியும் மேற்கோள் வசதிக்காகவும் சூத்திரங்களுக்குத் தொடரெண் கொடுக்கப்பட்டுள்ளது. இது சுவடியில் இல்லாத ஒன்று. மரபையொட்டிச் சூத்திரங்களுக்கு ஆங்காங்கே பொருள் தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவும் சுவடியில் இல்லாத ஒன்றாகும்.

## கூழங்கையார் உரை அமைப்பு

கூழங்கையார் எழுதியுள்ள உரை காண்டிகையாகும். இதனை அவர் நூலின் இறுதியில், 'நன்னூல் எழுத்துஞ் சொல்லுமாக இரு வகைக் காண்டிகையும் ஒரு வகையான் முடிந்தது. முருகன் துணை' என்னும் தொடரில் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வுரை கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு என்னும் மூவியல்பு களுடன் காணப்படுகிறது. மேலும், நூற்பாவில் இடம் பெற்றுள்ள மிகைச் சொற்களைச் சுட்டி, அவற்றால் மிகுதியான புதிய இலக்கணச் செய்திகளைத் தருதல், தம் கருத்துக்குத் துணையாக அகத்தியர், தொல்காப்பியர், அவிநயர் கருத்துக்களையும் சுட்டுதல், தேவையான இடங்களில் விளக்கங்களைத் தருதல் என்னும் இயல்புகளும் இவ்வுரையில் இடம்பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டுக்கள்:- கொஞ்சம், சாடு, சௌவுரியம், தொந்தி, நொறல், போது, மீசை, மொண்டு, வைச்சான், மணலை வாரு, சருகை வாரு, நீ தாழு, நீ வாழு என்பன போன்ற பழகு தமிழ்ப் பேச்சு வழக்குகளாக உள்ளன. பார்ப்பான் கள்ளுண்ணான், குருக்கள் வீட்டுக்கு வழி கேட்கத் துலுக்கவீடு என்பது , அறம் செய்யார் தீமானுடருள்ளும் விலங்கினுள்ளும் அழுந்துவர்; அறஞ்செய்தார் நன்மக்களுள்ளும் வீட்டின் கண்ணும் சென்று இன்பம் எய்துவர், செல்வமும் சிறப்பும் கல்வியும் மீக்கூற்றமும் வலியும் வனப்பும் ஆற்றலும் புண்ணியத்தான் ஆம், கார்த்திகை விளக்கு, ஓம் என்பன போன்ற பண்பாடு, சமய எண்ணம், நம்பிக்கைச் செய்திகளைத் தருவனவாக உள்ளன. தோல் பரிசிக்கும், வாக்கு வசனிக்கும் என்பன போன்ற மிகச் சில பிறமொழிச் சொற்களே எடுத்துக்காட்டுக்களில் இடம் பெற்றுள்ளன. செய்யுள் வழக்குகளுக்குத் திருக்குறளிலிருந்தும் சங்க இலக்கியங்களிலிருந்தும் பாடல் அடிகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

அகத்தியர், தொல்காப்பியர், அவிநயர் ஆகியோரின் நூற்பாக்களைப் பெயரைச்சுட்டி எடுத்துக்காட்டுகிற தம்பிரான்,

"நல்லவை அகத்திட்டு நவைபுறத் திடுவது
நெய்யரி மாண்பென நேர்ந்தன கொளலே"

"காலமும் வினையுந் தோன்றிப் பாறோன்றாது

வினைகொள் ளும்மது வினையெச் சம்மே"

என்னும் இரு நூற்பாக்களையும் நூலாசிரியரின் பெயரைச் சுட்டாது எடுத்துக்காட்டியுள்ளார்.

தம்பிரான் உரையில் மற்றுமொரு சிறப்பியல்பும் காணப்படுகிறது. பதவுரையை அடுத்துத் தொகையுரை, அரும்பதவுரை, அருகியவுரை என்பனவற்றுள் ஒன்று சில நூற்பாக்களுக்குத் தரப்பட்டுள்ளன. எழுத்தின் உருவம் குறித்த நூற்பாவின் பதவுரையை அடுத்து உள்ள தொகையுரை வருமாறு:

"தொகையுரை: எழுத்தினது தன்மையும் எழுத்தினது வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையின் ஆசிரியர் ஈண்டு உரைத்தில ரெனக் கொள்க. இங்ஙனம் கூறிய வடிவாவது கட்புலனாகியே நிற்கும் வரிவடிவு. அது வட்டம் சதுரம் முதலிய முப்பதிரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தால் உணரும் நுண்ணறிவில்லோரும் உணர்தற்கு எழுத்துகட்கு வேறுவேறு வடிவங்காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவுடையவும் உடையவாயிற்று"

மாத்திரையின் வரைவிலக்கண நூற்பாவில் உள்ள அரும்பதவுரை வருமாறு:

"அரும்பதவுரை: கட்புலனாகிய இமைக்காலமும் செவிப் புலனாகிய நொடிக் காலமும் கருதிக் கோடற்கு இரண்டும் ஓதினார். அன்றி இரண்டும் கூடி ஒரு மாத்திரைய அல்லவென்க"

'ஈறுபோதல் இடையுகரம்.' இய்யாதல் என்னும் நூற்பாவில் மட்டும் அருகியவுரை பதவுரையை அடுத்து இடம் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதி:

"அருகியவுரை: ஈற்றிற் செய்கையை முற்கூறியவதனால் இக்கேடு ஒருதலை அல்ல என்பதூஉம்.."

## இலக்கணக் கொள்கை

### எழுத்து வரைவிலக்கணம்

கூழங்கைத் தம்பிரான் எழுத்து இன்னது என அதன்

வரைவிலக்கணத்தினைத் தெளிவாக விவரிக்கிறார்.

> மொழிக்கு முதற் காரணமாகியும் வாயு அணுக்கூட்டத்தின் காரியமாகியும் வரும் ஓசையை எழுத்தென்று சொல்லப்படும். அவ்வெழுத்து முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இரண்டு பகுதிப்படும் என்றவாறு.
>
> எழுத்தென்றது யாதெனில் முன்பு கட்புலனாகாது மனனுருவாய் நிற்கும் கருத்துப் பொருளாய் பின்பு கட்புலனாகிய வடிவமுடையவாய் வேறுவேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கியைந்து நிற்கும் ஓசையேயாம்.
>
> கடலொலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும் முற்குவீளை முதலியன பொருளுணர்த்திற்று எழுத்து ஆகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளாராயினார்.

எழுத்துக்கு ஒலி, வரி எனும் இருவகை வடிவங்கள் இருத்தலின் தேவை இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும் இவ்விருவகை வடிவங்களுள் ஒலி வடிவமே முதன்மையும் இன்றியமையாததும் ஆகும் என்னும் கருத்தினைத் தம்பிரான் தெளிவாக எடுத்துரைக்கிறார். முற்கு, வீளை ஆகியனவும் குறிப்பினால் ஒருவகைப் பொருளை உணர்த்திக் கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை செய்கின்றன. ஆயினும் அவை சொல்லுக்கு உறுப்பாகி வரும் ஆற்றல் அற்றவை, ஆதலால் எழுத்து ஆகா என்பது அவரது விளக்கம். மூச்சுக்காற்றால் அமைகிற பேச்சொலி சொல்லுக்கு உறுப்பாக அமையும்போது எழுத்து என்னும் பெயரைப் பெறுகிறது என்பது தம்பிரானின் கருத்து.

### மொழிமுதல் எழுத்து

சொல் முதலில் வருகிற எழுத்துக்களை விவரிக்குமிடத்துத் தம்பிரான் ஞகரம் பற்றிக்கூறும் செய்தி ஏனைய உரையாசிரியர்களிடமிருந்து வேறுபடுகிறது. அ,ஆ,எ,ஏ எனும் நான்கு உயிர்களுடன் மட்டுமே ஞகரம் சேர்ந்து மொழிமுதலாகும் என்பது உரையாசிரியர்களின் கருத்து. ஆனால் தம்பிரான் இந்நான்கனோடு இகரத்தையும் சேர்த்துக் கூறுகிறார். அவர் தரும்

பதவுரைப் பகுதிவருமாறு:

அ ஆ இ எ ஒவ்வொடு - இவ்வைந்து உயிரோடுங் கூடி, ஆகுஞ் ஞம்முதல் - ஞகரம் மொழிக்கு முதலாம் என்றவாறு.

உ-ம்: ஞமண், ஞானம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கல் என வரும்.

இவ்வுரையை ஏற்றுத் தாமோதரன்,

'அஆஇ எஒவ்வொ டாகும் ஞமுதல்' என்னும் நூற்பாவை அமைத்துள்ளார்.

தம்பிரானின் பதவுரை இத்தகைய நன்னூல் நூற்பா இருந்திருக்கவேண்டும் என்ற துணிவைத்தருகிறது. ஞிமிறு, ஞிணம் போன்ற சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் இருத்தல் பற்றித் தம்பிரான் நன்னூல் நூற்பா மாற்றியுள்ளார் எனக் கருதவும் இடமுளது. இது போன்று நூற்பாச் சொற்களை மாற்றியமைத்த கொள்கையினை வேறு இடங்களிலும் காணமுடிகிறது.

நூலின் இயல்பினை விவரிக்கிற 5 ஆம் நூற்பாவில் 'டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்' என்று வரும் அடிக்கு 'இயலே படலம் என்னும் உறுப்பினில் - இயலுறுப்புப் படலவுறுப்பு என்னும் இவ்விரண்டு உறுப்பினை உடையதாய்' என்ற விளக்கம் காணப்படுகிறது. அவ்வாறே 17 ஆம் நூற்பாவிலும் 'இயலெனு மொழிப - இயலுறுப்பு என்று கூறுவர்' என்ற அமைப்பு இடம்பெற்றுள்ளது. ஏனைய உரையாசிரியர் களின் பாடத்தில் 'ஓத்து' என்று காணப்படுகிறதற்கு இவர் 'இயல்' என்ற சொல்லை ஆண்டுள்ளார். ஒத்து என்னும் சொல்லுக்குப் பிற்காலத்தில் (இவரது காலத்தும்) இடக்கரடக்கற் பொருள் அமைந்தமையால், இவர் இவ்வாறு மாற்றம் செய்திருக்கலாம். தொல்காப்பியத்தில் 'ஓத்து' எனும் சொல்லே காணப்படுகிறது.

### மெய்ம்மயக்கம்

மெய்ம்மயக்கத்தினை ஒரு சொல்லுக்குள் (தனிமொழி) அமைவது; ஒரு சொல்லுக்குள் மட்டுமன்றி, இரு சொற்கள் புணருமிடத்து இடையில் (புணர்மொழி) அமைவது என்று இருவேறு விதமாக இலக்கணிகள் கருதுகின்றனர். முந்தைய கருத்து

நச்சினார்க்கினியருடையது. எனினும் அவரால் சரியான எடுத்துக்காட்டுக்களைத் தர இயலவில்லை. அவர் தரும் எடுத்துக்காட்டுக்கள் புணர்மொழிக்கு உரியனவாகவும் உள்ளன. இளம்பூரணரோ பின்னால் புணரியலில் விவரிக்கப்படுகிற விதிகளின் சுருக்கமே மெய்ம்மயக்க விதிகள் எனக்கருதுகிறார். கூழங்கைத் தம்பிரானும் இளம் பூரணரின் கொள்கையினரே என்பதனை அவர் தருகிற சான்றுகள் நிறுவுகின்றன. தனிமொழியாகவும் புணர்மொழியாகவும் இச்சான்றுகள் உள்ளன. சில வருமாறு:

கங்கன், தெவ்யாது, கஞ்சன், உரிஞ்யாது
வேய்நீண்டது, கொல்யானை, கள்ளூ

பகரப்பதம்

செம்மை, கருமை, உணல், தினல், வரவு, செலவு போன்றவற்றைத் தம்பிரான் பகாப்பதம் எனக் கூறுதல் ஏற்புடையதன்று. இக்கருத்து முந்தைய பல இலக்கணிகளை ஒத்ததே.

கால இடைநிலை

உண்கு, உண்கும் என்னும் சொற்களில் உள்ள கு,கும் என்பனவற்றை நன்னூல் எதிர்கால விகுதிகள் எனக் கூறுகிறது. இதனைத் தம்பிரான் உடன்படுகிறார். ஆனால் நக்கான், புக்கான் என்பவற்றிலுள்ள ககரத்தைக் காலம் காட்டும் இடைநிலையாக இவர் ஏற்கவில்லை. இவை இறந்த காலத்தைக் காட்டுவன வாகும்.

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில

என்னும் நூற்பாவில் உள்ள 'இவை சில வில' என்பதற்கு 'சில வினையிடை இல்லையாம்' என்பது இவரது உரை. மேலும், 'சிலவில' என்பதினானே நக்கான், புக்கான், சொன்னான், போனான், வைச்சான் என்பனவும் கொள்க என்றும் தம்பிரான் உரைக்கிறார். இங்கு ன், ச் என்பவற்றை இவர் இறந்தகால இடைநிலையாக ஏற்கவில்லை. 'இன்' என்ற இடைநிலையின் திரிந்த வடிவமாக னகரத்தையும் வைத்தான் என்பதன் திரிந்த பாமரமக்களின் வடிவமாகச் சகரத்தையும் கொண்டதால், தம்பிரான் இவையும் கால இடைநிலைகளே என்ற உண்மையை அறிய முனையவில்லை.

மொண்டு, போது, சௌவுரியம் (நூற்பா 102), கள்ளு (நூற்பா 118) போன்ற பேச்சுவழக்குகளை ஏற்றுச் சான்று காட்டும் தம்பிரான், நூலாசிரியர் கருத்துக்கு மாறான கருத்தை ஏற்றல் கூடாது என்னும் கொள்கை காரணமாகவே இவற்றைக்கால இடைநிலைகள் எனச் சுட்டுதற்குத் தயங்குகிறார்.

### புணர்ச்சி

சொற்களுக்கு இடையே ஓசை இடையறவுபடின் சொல்லக்கருதிய பொருளைக் கேட்போர் திரித்து உணர நேரிடும். எனவே பொருளைச் செம்மையாக உணர்த்தற்குப் புணர்ச்சி இன்றியமையாததாகும். இதனைத் தம்பிரான், 'புணர்ச்சியென்பது ஒன்றுண்டாம் பிற வெனின் அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின்கண்ணே உணர்வராதலின்' என்று குறிப்பிடுகிறார்.

குற்றியலுகரங்களுள் இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்றிடை இரட்டாத நெடில் மற்றும் உயிர்த்தொடர்களை அடுத்து வேற்றுமை, அல்வழி இரண்டிலும் வல்லெழுத்து மிகாது என்பது நன்னூல் விதி. இதனை ஏற்று உரையும் எடுத்துக்காட்டுக்களும் தம்பிரான் தந்துள்ளார். எனினும், இயல்புப் புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி என்பன போன்ற தொடர்களையும் அவர் பரவலாகக் கையாண்டுள்ளார். இவ்வழக்குப் பிற்கால மொழி நிலையை அவர் ஏற்றுள்ளார் என்பதனைக் காட்டுகிறது.

ஞ், ண், ந், ம், ல், வ், ள், ன் என்னும் எட்டு ஒற்றுக்களையும் ஈற்றில் கொண்ட சொற்கள் ஏவல், தொழிற் பெயர்களாக வழங்குமிடத்து உகரம் பெறும் என்பது நன்னூால் விதி (205). ஆனால் தம்பிரான் இவற்றுடன் ரகர, ழகர ஈற்றுச் சொற்களையும் எடுத்துக்காட்டுகிறார்.

"நனி" என்றதினாற் சிறுபான்மை இவை எட்டொற்று மல்லாத பிற ஒற்றினும் உகரம் பெறுமென்க. மணலை வாரு, சருகை வாரு, நீதாழு, நீ வாழு என ரகர ழகரம் ஏவற்கண் உகரம் பெற்றன.

தம் காலத்து மொழி வழக்கிற்கும் தம்பிரான் உரையில் இடமளித்துள்ளார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

பலர்பால் விகுதிகளாக நன்னூல் ரகர வொற்றையும் 'கள்' என்பதனையும் குறிப்பிடுகிறது. இதற்குத் தம்பிரான் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

> 'உ-ம்: ஆண்பாற்குரிய பெயர்க்கு மேற்காட்டிய உதாரணங்களை ரவ்வீறாகத் திரித்துக் கண்டுகொள்க. கள்ளீற்றுக்கும் ஏற்பன கொள்க.
>
> அவர்கள், அரசர்கள், உண்டவர்கள், உறங்கினவர்கள் என்பன ஒருசார் ரகர வொற்றும் கள்ளென் விகுதியும் கூடி வந்தாலும் முன்னின்ற ரகர ஒற்றே பால் விளக்கும்; ஏனையது வாய்பாடு நிரம்பல் மாத்திரையாய் வந்ததெனக் கொள்க'

அவர்கள் என்பது போன்ற சொற்களில் ரகரமும் கள்ளும் இணைந்தே பலர்பாலை உணர்த்துகின்றன. பலர்பாலில் முன்னாளில் வழங்கிய ரகர விகுதி, மரியாதையைக் குறித்து ஒருமையில் வழங்கிய காலத்து அஃறிணைக்குரியதாக இருந்த பன்மை விகுதி கள் உயர்திணையிலும் இடம்பெற்றுப் பன்மையை வரையறுப் பதாயிற்று. இவ்வுண்மையை ஏற்காத உரையாசிரியர்களின் மரபைப் பின்பற்றி, இவரும் 'கள்' வெறும் ஓசை நிரப்பியாகவே வழங்குகிறது எனக் கூறுகிறார். முந்தைய உரையாசிரியர்களின் இலக்கணக் கொள்கையினை வழி மொழிதலே கூழங்கைத் தம்பிரான் உரையின் பெரும்பான்மை இயல்பாகும்.

## பெயரெச்சம்

நன்னூல் (353) பெயரெச்சம் எதிர்மறையாக வருதலையும் குறிப்பிடுகிறது. இதற்கு உரையாசியர்கள் உண்ணாத, தின்னாத போன்ற வடிவங்களைச் சான்று காட்டுகின்றனர். இதனை ஏற்றுக்கொண்ட தம்பிரான், 'உண்ணாத, தின்னா என்னும் பெயரெச்சம் சிறுபான்மை உண்ணா, தின்னா எனவரும்' எனக் கூறுகிறார். இங்கு ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களை அவர் பெயரைச் சுட்டாது எடுத்துரைக்கிறார்.

### வேற்றுமை உருபு

நன்னூல் எட்டு வேற்றுமைகளும் உருபு உடையன எனக் கருதுகிறது.

ஒருவன் ஒருத்திபலர் ஒன்று பலவென
வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்
குருபும் உறழ்தர நாற்பதாம் உருபே ( 239)

என்னும் நூற்பா இக்கருத்தினைத் தெளிவாக்குகிறது. கூழங்கையாரும் இக்கருத்தினையே வழிமொழிகிறார். 'எண்வகை வேற்றுமை உருபுகளும்' என்று 'உருபு முற்றீ ரெச்சம்...' என்னும் நூற்பாவிற்கு (355) அவர் தரும் விளக்கம் இதற்கு வலுவான ஒன்றாகும். வேற்றுமை உருபு குறித்த கொள்கையில் இவர் முந்தைய இலக்கண உரைகாரர்கள் பலரின் கருத்தோடு இயைந்து செல்கிறார்.

### வினைச்சொல்

வினைச் சொல்லைப் பகுத்து, அதன் உறுப்புக்களை ஒட்டித் தம்பிரான் வரைவிலக்கணம் தரும் முறை குறிப்பிடத்தக்கதாகும்.

'..... பகுதி செயலை விளக்கும்; இடைநிலை காலத்தை விளக்கும்; விகுதி செய்பவனை விளக்கும்; ஒழிந்தவை மறைந்து நின்று விளக்கும் என்பார் கருத்தும் கொள்க' (நன். 319)

இவ்விளக்கத்தினை இவர் பிறர் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் எடுத்துரைத்துள்ளார் ஆயினும், கருத்துக்குரியவரைச் சுட்டிக்காட்டாது பொதுவாகக் குறிப்பிட்டுள்ளார்.

### இடைச்சொல்

இடைச் சொல்லுக்குப் 'பிறிதின் இடத்தைச் சார்ந்து நடத்தலான் இடைச்சொல் என்க' எனக் கூழங்கையார் விளக்கம் தருகிறார். பெயரையும் வினையையும் சார்ந்து இடத்திற்கேற்ற சார்புப் பொருளைத் தருதலால் இவ்வாறு கருதுகிறார். ஒரு சொல் குறை நிலையிலோ முழுநிலையிலோ அமைந்து, பிறிதொரு சொல்லைச் சார்ந்து, தனக்குரிய பொருளை இழந்து, சாரப்பட்ட

சொல்லின் பொருளை விளக்கும் வகையில் வருதல் இடைச் சொல்லின் இலக்கணமாகும். படித்துக்காட்டு, போய்த்தொலை, இருந்திட்டு படிக்க முடியும், அண்ணன்தான் என்பவற்றில் வரும் காட்டு, தொலை, இட்டு முடியும், தான் என்பன இத்தகையன. இவற்றை இலக்கண நூல்கள் இடைச்சொற்களாகக் கருதுகின்றன. இடத்திற்கு ஏற்பப் பொருள் தரும் 'இடச்சொல்' என்பதே இடைச்சொல் என வடிவ மாற்றம் பெற்றுள்ளது. கூழங்கையாரின் விளக்கமும் இந்த விளக்கத்தை ஒத்ததே.

நன்னூல் தரும் இடைச்சொற்களோடு, தம்பிரான் மேலும் சிலவற்றைப் பட்டியலிட்டுள்ளார். தொறு, தோறு, ஞரோ, அந்தோ, அன்னோ, கொல்லோ, ஆ, ஆஅ, இனி, என், ஏன், ஏதில்,ந, கல், ஒல், கொன், துடும், துண், பொள், கம், கொம் என்பன அவை. இப்பட்டியலில் உள்ள சொற்கள் முந்தைய இலக்கண உரையாசிரியர்களிடமிருந்தும் இலக்கணவிளக்கம் போன்ற நூல்களிலிருந்தும் பெறப்பட்டவை ஆகும். இச்சொற்களுள் 'ந' என்பது சிறப்புப் பொருளை உடையது என்பது இவர் கருத்து.

> 'ந சிறப்புப் பொருளை உடையதாய்ப் பேர்முன் அடுத்து வரும். நக்கீரர், நச்செள்ளையார், நப்பின்னை, நந்நாகனார், நக்கடகம் எனக் காண்க' (நன்னூல் 420)

'நல்' என்னும் பண்பு அடிச் சொல்லையே தம்பிரான் இங்கு 'ந' எனக் குறிப்பிடுகிறார். நல் என்பதன் லகரம் புணர்ச்சியில் வடிவமாற்றம் பெற்றுள்ளது. இச்சான்றுகளில் நகரம் தனக்கே உரிய உரிமைப் பொருளை இழக்கவில்லை. எனவே இது இடைச்சொல்லன்று.

கூழங்கைத் தம்பிரான் நன்னூல் உரை பழகு தமிழ்ச் சொற்களால் ஆனது; எளிதில் புரிந்துகொள்ளுமாறு சுருக்கமாகவும் தெளிவாகவும் அமைக்கப்பட்டுள்ளது.அவர் வாழ்ந்த காலத்தைய வழக்குச் சொற்களையும் சமய, பண்பாட்டு நம்பிக்கைகளையும் இவ்வுரையில் காணமுடிகிறது. மொழிவழக்கினை ஒட்டிய புதிய இலக்கணச் செய்திகளையும் தம் உரையில் தம்பிரான் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழைச் செவ்வியல்மொழி என அறிவிப்பதில் நமக்கும் பங்குண்டு

*தமிழண்ணல்.*

இந்திய நாட்டின் அயல் நாட்டுத் தூதரகங்களில் குறிப்பாகத் தமிழர்கள் வாழும் மலேசியா, சிங்கப்பூர், மாலத்தீவு முதலானவற்றில் தமிழ் தெரிந்த அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும் என்று தமிழக அரசு நடுவனரசுக்கு எழுதியிருப்பது மிக முக்கியமான ஒரு செய்தியாகும்.

மொழி தொடர்பான நன்முயற்சிகளில் அனைவரும் ஒரே குரலில் ஒலிப்பதுதான் நலம் பயக்கும். இவற்றில் கட்சி வேறுபாடு கருதி ஒருவர் செயலை மற்றவர் புறக்கணிப்பது போன்ற நிலைமை கூடாது.

யாரும் யாரையும் 'காக்கைபிடிக்க' இதை எழுதுவதில்லை; யாருடனும் யாரும் பகைப்பதாகக் கருதுவதும் தவறு. இங்கு தரப்படும் கருத்துக்கள் அனைவரும் மனங்கொளத்தக்கன. கல்வியாளர்களாகிய தமிழறிஞர்கள் இவை நிறைவேற்றப் பட்டால், அவ்வாறு நிறைவேற்றுபவர்கள் யாராயினும் அவர்கள் புகழைத் தமிழ் - தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறித்து வைப்பார்கள்.

இன்றுள்ள நிலை, எமக்குத் தெரிந்தவரை அயல் நாட்டுத் தூதரகங்கள் அனைத்திலும் 'இந்தி' அதிகாரிகளே உள்ளனர்; ஹிந்தியில் மட்டுமே 'படிவங்கள்' உள்ளன. இதனால் இந்தியா, இந்திமொழி ஒன்றே வழங்கும் நாடு என்ற எண்ணம் வெளிநாட்டு, விவரம் தெரியாத மக்கள் மனத்தில் பதிவிக்கப்படுகிறது. இன்று நேற்றன்று; அமெரிக்கத் தூதரகத்திலும் இதைக் கண்கூடாகக் காணலாம்.

ஹிந்தியிலும் இராணுவ அதிகாரிகளுக்குத் தேர்வு நடத்தப்படும் என முடிவு செய்யப்பட்டிருப்பதை அறிந்து இரா.செழியன், அதைக் கைவிடுமாறு நடுவணரசை வற்புறுத்தியுள்ளார். (தினமணி 5.12.03)

ஒருவாரத்திற்கு முன்பு இந்தியா வந்திருந்த மொரீசியசு அமைச்சரிடம், அங்கு விரைவில் 'ஹிந்தி மொழிப் பயிற்சியகம்' தொடங்கப்படும் என, நடுவணரசு உறுதியளித்துளது. மொரீசியசிலும் ரீயூனியனிலும் மட்டும் ஐந்து இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். தென்னாப்பிரிக்காவில் எட்டு இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். இங்கு எல்லாம் 'தமிழ்மொழிப் பயிற்சி மையங்கள்' அல்லவா தொடங்கப்படவேண்டும். இதனை யார் கவனத்திற் கொள்வது? மாநில அரசு விழிப்பாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சிகள் 'கூட்டணி' காரணமாகத் தமிழை விட்டுக் கொடுக்கலாகாது.

நடுவில் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி வந்தது முதல், பாரத நாட்டிற்குப் பொதுவான அரசு நிறுவனங்கள், திட்டங்கள், புதிய வளர்ச்சித்துறைகள் அனைத்திற்கும் 'பாரத் சஞ்சார் நிகம் லிட்' தொடங்கி, இதுகாறும் சுமார் முந்நூறு பெயர்கள் இந்தியாவில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. முன்னதாக இவை ஆங்கிலத்தில் இருந்தமை முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. 'சர்வ சிக்ஷா அபியான்' அல்லது 'யோஜனா' என வழங்குவன, இங்கு யாரையும் சிந்திக்க வைக்கவில்லை. இந்தியக் காப்பீட்டு நிறுவனப் பெயர்கள் (ஜீவன் பாரதி, ஜீவன் சிக்ஷா) என்பன; பாரத அரசு வங்கியின் புதிய பெயர்களும் 'ஹிந்தி' தெரிந்தாலன்றி விளங்கா.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தமிழ் நிகழ்ச்சிகளிடையே - திரைப்படப்பாடல்களிடையே, திடீர் என 'ஹிந்தி'யில் விளம்பரங்கள் புகுத்தப்பட்டு, நெடுநாட்களாக நடந்து வருகின்றன. கூட்டணி காரணமாகவோ, என்னவோ நம்மவர்கள் கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய் உள்ளனர். பல மொழிபேசும் நாட்டை ஒருமொழியின் மேலாண்மையுள்ள நாடாக மாற்றமுயன்ற, யு.எஸ்.எஸ்.ஆர் என்ன ஆயிற்று, என எடுத்துச் சொல்லக்கூட இங்கு யாரும் இல்லை.

'தமிழைச் செவ்வியல் மொழி' ஆக்கவேண்டும் என்றும் 'தமிழை மத்தியிலும் பாராளுமன்ற மொழியாக' 'ஆட்சி

மொழியாக ஏற்கவேண்டுமென்றும் பலரும் முழக்க மிடுகின்றனர். வருகிற தேர்தல் அறிக்கைகளிலும், அனைத்துக் கட்சிகளும் இதற்கு இரண்டு பத்திகள் ஒதுக்கப் போவதும்' முழங்கப் போவதும் உறுதி.

தமிழ் செவ்வியல் மொழியே. (செம்மொழி எனல் பொருந்தாது) கட்டளைத் தமிழ் செம்மொழி (Standard Language) செவ்வியல் (Classicison) என்பது, மிகவுயர்ந்த, தொன்மைமிக்க, வளமான மொழியைக் குறிக்கும்; இலக்கிய வளம், சொற்செறிவு முதலான பல அடங்கும், நடுவணரசு அறிவித்து, அதற்கு ஏற்ப நிதியுதவி, ஆதரவு, தகுதியுடைமை அனைத்தையும் செய்ய வேண்டும் எனக் கேட்பது மிகவும் வரவேற்கப்படவேண்டிய ஒன்று.

ஆனால் இது நடுவணரசு செய்ய வேண்டுமென, நாம் வற்புறுத்திப் போராடவும் நினைக்கும் அதே சமயத்தில் நாமும் நம் பங்கினைச் செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

தமிழைச் 'செவ்வியல் மொழி' என, உலகம் அறிய அறிவிக்க ஆர்வம் காட்டும் நாம், நம் மொழிக்கு அத்தகுதிக்கான 'சிறப்புகளை' உடனடியாகச் செய்வதும் நமது மொழியின் செவ்வியல் தன்மையை இந்தியக் குடிமக்கள் அனைவரும் அறியும் வண்ணம் ஆவண செய்வதும் உடனே கடைப்பிடிக்க வேண்டும்.

என் தாய்க்கு உரிய மதிப்புக் கொடு என்று கேட்கும் நம்மைப்பார்த்து, 'நீ உன் தாய்க்குத் தந்த சிறப்பு என்ன' என்று பிறர் கேட்கமாட்டார்களா? வாய்திறந்து கேட்காவிட்டாலும், இவர்கள் வெறுமனே மக்களிடம் வாக்குச் சேகரிப்பதற்காக, இந்த நாடகம் ஆடுகிறார்கள் என்று மனதுக்குள் எண்ணமாட்டார்களா? நம் குறிக்கோளில் நாம் வெற்றிபெறுவது எப்படி?

1. அனைத்திந்திய இலக்கிய ஆய்வு அரங்குகளில் கலந்து கொள்ளும்போது, "நாங்கள் எங்களுக்குச் சமஸ்கிருதமே அறிமுகப்படுத்தப்படுவதால், அதிலிருந்தே மேற்கோள் காட்டுகிறோம். உங்கள் தமிழில் இருப்பதை ஒரு கட்டுரையில், நீங்கள் படிக்கும்போது, அதிலுள்ள தனிச்சிறப்பு ஓரளவு புலனாகிறது. ஆனால் உங்கள் இலக்கியச் செல்வங்களை

யெல்லாம், எங்கள் மொழியில் முழுமையாகத் தந்தாலல்லவா, நாங்களும் அவற்றின் பெருமை அறிந்து போற்றமுடியும்" என்று மிகப் பலர் - இலக்கியப் பேரறிஞர்கள் வினவக்கேட்டுள்ளோம். வடக்கே இந்தி, வங்காளம், குஜராத்தி, மராத்தி - தெற்கே மலையாளம், கன்னடம்,தெலுங்கு இவற்றிற்கு மூலவிசையாக ஆங்கிலம் ஆக இந்த எட்டு மொழிகளிலும், சிறிதும் பொருளுணர்ச்சியும் நயமும் மாறாமல் தொல்காப்பியமும் சங்க நூல்களும் இரட்டைக் காப்பியமும் திருக்குறளும் பக்தி இலக்கியமும் மொழியாக்கம் செய்து வழங்கப்பட வேண்டும். மற்ற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் முதல் பாமரர் வரை அறியும் வண்ணம் இவை பரப்பப்படவேண்டும். இதற்கு என நூறுகோடி ஒதுக்கினும் தகும். இவற்றை மொழியாக்கம் செய்யவல்ல அறிஞர்கள் இன்று தமிழகத்தில் மிகச்சிலரே உள்ளனர். அவர்களும் இதில் ஈடுபடுத்தப்படாது மறைவதால் நம் எண்ணம் ஈடேறாது.

தமிழ்வாழ்க, தொல்காப்பியம் ஓங்குக, சங்க நூல்கள் ஒப்பற்றவை - இத்தகைய முழக்கங்கள் பயன்தரா. குடும்பத்தைச் சிறப்புற நடத்தாமல், 'மனைவியே வாழ்க, மகனே வாழ்க' என வெறும் முழக்கமிட்டால், அப்பெண்மணி கையில் எதை எடுப்பாளோ யான் அறியேன்?

2. பழந்தமிழ் நூல்களை மட்டுமன்றி அவற்றில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள் தனித்தன்மைகள், சிறப்புக் கூறுகள் இவையும் கலைக் களஞ்சியங்களாக உலகிற்கு உணர்த்தப்பட வேண்டும். சாகித்திய அக்காதெமி சார்பாக பாலா என்று அழைக்கப்படும் ஆங்கிலப் பேராசிரியர் இதுபற்றி முயன்று வருகிறார். ஒரு கோடி ரூபாய்த் திட்டமென்றால், செம்பாதியை நாம் அக்காதெமியிடம் பெற வாய்ப்புளது. மனித வள மேம்பாட்டுத்துறை எனப்படும் கல்வி அமைச்சகத்தில் தமிழக அரசு முயன்றால் திட்டச்செலவில் பாதியை 'மானியமாகப்' பெறமுடியும்.

எங்ஙனமாயனும் கிரேக்கம், இலத்தின், சம்ஸ்கிருதம் ஆகிய இவற்றினுக்குச் சமமான தொன்மை - சிறப்பு - வளம் - இலக்கியம்

- இலக்கணம் ஆகியவற்றையுடையது தமிழ் என்பதை நாம் இந்திய நாட்டிற்கும் உலக அரங்கிற்கும் உணர்த்த வேண்டும். இது நம் கடமையே. இதை நம் தமிழக அரசுகள் உணர்ந்து செயற்பட்டால் இந்திய நாடு என்ன, உலகமே போற்றும். கட்சி வேறுபாடின்றி அனைவரும் சேர்ந்து செய்யவேண்டிய பணி இது.

3. திருக்குறளை முதன்முதல் வீரமாமுனிவர் இலத்தினில் மொழியாக்கம் செய்தபிறகு, ஐரோப்பிய, ஆங்கில மொழியறிஞர்கள் அதன் சிறப்பை ஓரளவு அறிந்தனர். அதனால் தால்ஸ்டாய் முதல் ஆல்பர்ட்டு சுவைட்சர்வரை திருக்குறள் பற்றிச் சிறப்பித்து எழுதினர். அதாவது திருக்குறளை. நாம் உலகினுக்குத் தரவில்லை; அவர்கள்தான் வந்து எடுத்துச் சென்றார்கள். இன்னும் திருக்குறள் அதன் உண்மையான பொருளின்படி முழுமையாக உலகிற்குத் தரப்படவில்லை.

4. உலகிலுள்ள தமிழ்பேசும் மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் தமிழைப்படிக்க, மேற்கல்விகற்க, பழந்தமிழ் நூல்களில் ஆராய - முக்கியமாகத் தமிழை எழுதிப்படிக்கும் அறிவு பெற மிகுந்த வேட்கை காணப்படுகிறது. நாம்தான் பொது நிதி ஒன்று சேர்த்து, அவர்களின் ஆர்வத்திற்கு உதவவேண்டும். இது 'நாடு காண் காதை' யாகவே முடிகிறது.

5. 'தமிழ்ப் பண்பாடுகள்' பிறநாட்டு, பிறமொழி மக்களால் போற்றப்படுகின்றன. உலகெங்கும் பரவியுள்ள தமிழ்மக்கள் தமிழ்ப்பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், விழாக்கள் இவற்றை மறந்துவிடாமல் காப்பாற்ற நாம் என்ன செய்யப்போகிறோம். அமெரிக்கப் பெருநகரங்களில் எல்லாம் 'சைனா டவுன்' என்ற ஒரு பகுதி உளது. அதற்குள் நுழைந்தால் 24 மணிநேரமும் சீன மொழிபடிக்கலாம், அதனுள் போய்வருவதைக் கடமையாகக் கொண்ட ஒவ்வொரு சீனனும் வெளிநாட்டவருடன் வாழ்ந்தாலும், 'தன்னை ஒரு சீனனாகப்' புதுப்பித்துக்கொண்டு வெளியே வருகின்றான்.

6. கன்னடமொழி உச்சநீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பைக்காட்டி நாமும் வெற்றி பெற்று, நம் பள்ளிகளில் தமிழ்க் கல்வியை நிலை நிறுத்த வேண்டாமா?

'செவ்வியல்மொழி' பற்றிப் பேசுபவர்கள், தமிழகப் பள்ளிகளில் தமிழைப்படிக்காத நிலை நீடிப்பதைப் பற்றிப் பேசுவதே இல்லை.

தில்லிக்குக் கேட்குமளவு முழக்கமிடும் இவர்கள், இங்கு தங்கள் 'கல்வியை' (தாயை) தவிக்கவிடலாமா?

7. பாரத நாடு முழுவதும் களஆய்வு, தொல்பொருளாய்வு, மொழியியலாய்வு செய்தால், ஒருகாலத்தில் இந்தியா 'தமிழ் இந்தியாவாகவே' இருந்ததை நிறுவலாம், ஊர்ப் பெயர், இடப்பெயர், ஆட்பெயர்களும் இதிலடக்கம்.

8. ஆங்கிலத்தை நாம் புறக்கணிக்க வேண்டாம். ஆங்கில மூலமே கற்க விரும்புபவர்களை நாம் தடுக்க வேண்டாம்.

அதே சமயம் தமிழிலேயே மெட்ரிக் முதலானவை படித்து ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாகக் கற்கவிரும்புகிறவர்கள் இருக்கிறார்கள்.

உயர் கல்வியைத் தமிழில் விடையெழுத தமிழில் கற்க விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழில் படிக்க, எழுத வாய்ப்புத் தருவது ஆங்கில வழி படிப்பவர்களை எதிர்ப்பதாகாதே?

தமிழைச் 'செவ்வியல் மொழி' ஆக்க விரும்பும் நாம், தமிழகத்தில் தமிழுக்கு ஆங்கிலத்திற்கு மேலான இடம் தராவிட்டாலும் - சமமான இடமாவது தரலாகாதா? தமிழில் படிக்க விரும்புபவர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள்தானே? அவர்களுக்குச் சம உரிமை தரலாகாதா?

9. அண்மையில் காசிக்குச் சென்ற தமிழகப் பதிப்பாளர் ஒருவருக்கு நோய்வாய்ப்பட நேர்ந்தது. அங்குள்ள மருத்துவ மனையில், டாக்டர் முதல் யாருக்கும் ஆங்கிலம் தெரியாததால், சென்னையிலிருந்து இந்தி தெரிந்த ஒருவரை அழைத்துப்போய் மருத்துவம் பார்க்க நேர்ந்தது. வடக்கே தாய்மொழிகள் வெகுதூரம் வளர்ந்துவிட்டன. தமிழர்களாகிய நாம் எங்கே போக விரும்புகிறோம் என்பதுதான் இன்னும் விளங்கவில்லை.

# வள்ளுவத்தில் இயற்பியல் கூறுகள்

*பேராசிரியர் மெ.மெய்யப்பன்*
இயற்பியல் துறை
அழகப்பா அரசு கலைக்கல்லூரி
காரைக்குடி.

*1. நிறை - ஆற்றல் சமன்*

வள்ளுவரின் அறிவியல் கண்ணோட்டம்

அறிவியல் கண்ணோட்டம் அல்லது அறிவியல் நோக்கிற்கு எவரும் கூறாத வரையறையைத் திருவள்ளுவர் அன்றைக்கே மொழிந்துள்ளார். இது இரத்தினச் சுருக்கமாகவும், தெளிவாகவும், துல்லியமாகவும் இருப்பது அதன் சிறப்பாகும்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்: 355)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்: 423)

இக்கருத்தே இன்றளவும் அறிவியல் கண்ணோட்டத்தில் மிகச் சரியான விளக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

'வினை செயல் வகை' எனும் அதிகாரத்தில் ஒரு குறள் அறிவியல் கண்ணோட்டத்தில் இயற்பியல் கூறுகளைத் திட்பமாய் எடுத்துரைக்கின்றது.

"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்: 675)

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட வினை, உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செயல்படுவர் ஆராய்ச்சியாளர்கள் என்று தெரிவித்துள்ளார் வள்ளுவர்.

வள்ளுவர், இயற்கையைப் பார்த்துப் பார்த்துக் கற்றுக்கொண்ட பாடங்களே, அவருடைய படைப்பில் அறிவியலாகப்

பூத்திருக்கின்றன. குறளை நுண்ணாய்வு செய்து இதுபற்றிய கருத்துக்களை உறுதிப்படுத்துவோம். அறிவியலின் பல கிளைகள் சார்ந்த கருத்துகள், குறளில் ஒருசேரக் காணப்பட்டாலும் இயற்பியல் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய வள்ளுவச் சிந்தனைகள் தொடர் கட்டுரைகளாக இப்பகுதியில் வரவிருக்கின்றன.

*நிறை - ஆற்றல் சமன்* (Mass - Energy Equivalance)

இயங்கும் பொருட்களின் இயற்பியல் பண்புகளை அறியும் பொருட்டு ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன் மேற்கொண்ட முயற்சிகள் அறிவியல் உலகிற்குச் சார்புக் கொள்கையைத் (Theary of Relativity) தந்தன. இதன்படி நிறையும் ஆற்றலும் ஒரு பொருளின் இருவேறு வடிவங்களே ஆகும். பொருள் சிதைந்தால் ஆற்றல்; ஆற்றல் திரண்டால் பொருள் என்ற கருத்தை நிலைநாட்டும் நிறை - ஆற்றல் கோட்பாடு இதன் வெளிப்பாடாகும். இது இயற்பியலில் உலகப் பொதுவான விதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஆற்றல் மாறாக் கோட்பாட்டிற்கும் (Law of Conservation of Energy) அடிப்படையாக இருக்கின்றது.

ஆற்றல் மாறாக் கோட்பாட்டின்படி ஓர் அமைப்பின் மொத்த ஆற்றல், அது தனித்திருக்கும்போது மாறுபடுவதில்லை. ஒரு வகையான ஆற்றல் மற்றொரு வகையான ஆற்றலாக மாறலாம். அப்போது ஆற்றல் உருமாற்றம் பெறுமே ஒழிய அழிவதில்லை. இயற்கை யாங்ஙனும் பின்பற்றி ஒழுகும் இந்த இயற்பியல் நெறிமுறையை அறிவியல் அறிஞர்கள் பயன்படுத்தி பல உயர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக,. அணுக்களுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் மூலத்துகள்கள் (Elementary Particles) பற்றிய ஆய்வுகளையும், அணுக்கருச் சிதைவு, அணுக்கருச் சேர்க்கை மற்றும் வேதியியல் வினை மாற்றங்களின் போது விளையும் ஆற்றல் வெளிப்பாடு பற்றிய ஆய்வுகளையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒரு பொருள் ஆற்றலாகவும், துகளாகவும் இருக்கமுடியும் என்பது இயற்கை சமச்சீர்மையின் (Symmetry) மீது கொண்டுள்ள நேசிப்பின் வெளிப்பாடு ஆகும். இயற்கையின்

இப்போக்கிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட லூயுஸ் டி பிராக்ளி என்ற பிரெஞ்சு நாட்டு அறிஞர் பொருள் அலை (Matter Wave) என்ற புதிய கருத்தினை நிறுவினார். இது பொருளின் இருமைப் பண்பைத் தெரிவிக்கின்றது. இதன்படி மிகவேகமாக இயங்கும் எலெக்ட்ரான் போன்ற ஒரு மின்துகள் அலையாக ஆற்றல் வடிவத்தில் இயங்கும் எனலாம். இப்புதுமைக் கருத்துகளே தற்கால குவாண்டம் இயக்கவியலுக்கு (Quatum Mechanics) அடிப்படையாக இருக்கின்றன.

இதைப்போல ஒளியானது நுண்ணியதுகள் வடிவில் இயங்குவதாக நியூட்டன் தெரிவித்தார். ஆனால் ஒளிக் குறுக்கீடு விளைவு (Interference) விளிம்பு விளைவு (Diffraction) தள விளைவு (Polarisation) போன்ற ஒளியியல் நிகழ்வுகளை விளக்க முடியாததால் கைஜென்ஸ் என்பார் ஒளி, அலைபோல இயங்குகிறது என்று நிறுவினார். பின்னர் மின்காந்த அலைகளைப் (Electromagnetic Waves) பற்றி மாக்ஸ்வெல் என்பார் விரிவான ஆய்வை மேற்கொண்டபொழுது, ஒளி வெற்றிடத்தில் துகளாகவும், ஊடகத்தில் அலைபோலவும் செயல்படுவதாக ஆய்ந்துரைத்தார்.

இயற்கையின் இக்கண்ணோட்டத்தைத் தன் மெய்யறிவினால் உணர்ந்துகொண்ட திருவள்ளுவர் இக்கருத்தை 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தில் ஒரு குறளில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்" (குறள்: 154)

உரையாசிரியர்கள் இக்குறளுக்குத்தரும் பொருள், 'நிறையுடையவனாக இருக்கும் தன்மை தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டினால் அமைதியாகவும் அடக்கமாகவும் இருக்கவேண்டும்'

இக்குறளில் நுட்பமான அறிவியல் வாசனை மணக்கின்றது என்பதைத் தமிழறிந்த அறிவியல் அறிஞர்கள் மட்டுமே அறிவர். ஒரு பொருளின் நிறை முழுமையாக, மாற்றமேதுமின்றி இருக்க, அது அமைதியாக இயங்காமல் இருக்கவேண்டும். இயங்க

இயங்க அதன் வேகம் அதிகரித்து அதன் இயல்பு நிறையில் பெரும் மாற்றம் ஏற்படும், ஒரு பொருள் இயக்கம் ஏதுமின்றி ஓய்வாக இருக்கும்போது அதன் நிறையை ஓய்வு நிலை நிறை என்பர். அப்பொருள் ஒரு திசைவேகத்தில் இயங்கும்போது அதன் நிறை வேகத்திற்கு ஏற்ப அதிகரிக்கும் இயங்கு வேகத்தின் உயரளவு, ஒளியின் திசை வேகமான $3X10^8$மீட்டர்/ வினாடி ஆகும். இவ்வேகத்தில் பொருள் நிறை ஈரிலியாகும். அதாவது இயங்கு பொருள், நிலைத்த தன் தன்மையை, இயக்கத்தின் காரணமாக மாற்றிக்கொண்டு விடுகின்றது என்ற கருத்து இதன் உட்பொருளாகும்.

மேலும் பொருளின் வேகம் அதிகரிக்க அது 'பொருள் வடிவத்தை இழந்து அலை வடிவத்தை மேற்கொள்கின்றது என்பதைப் பொருளின் இருமைப்பண்பு (Dualism) தெரிவிக்கின்றது. இவ்வறிவியல் பேருண்மைகள் வள்ளுவத்தினுள் அடக்கமாகியிருப்பதைக் காணமுடிகின்றது.

ஒரு பொருள் இயங்காமல் ஓய்வு நிலையில் இருக்குமானால் அது தன் நிறைவுடைமையைச் சிறிதும் இழப்பதில்லை என்ற கருத்திற்கு வள்ளுவரின் கண்ணோட்டமும் இணக்கமாய் இருக்கின்றது.

பழந்தமிழ்ப் புலவர்கள் படைப்பாளிகளேயன்றி, அறிவியல் அறிஞர்கள் அல்லர். அறிவியற் செய்திகளை முறையான சோதனைகளின் அடிப்படையில் அவர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. ஆனால் அவர்கள் இயற்கையைக் கூர்ந்து நோக்கினார்கள். அவற்றிலிருந்து பெற்ற படிப்பினைகளை அவர்கள் கற்பனை நயத்தோடும், கவி நயத்தோடும் பாடல்வரிகளை அமைத்தனர் என்றாலும், இன்றைய அறிவியலுக்கு வழிகாட்டியான அதே இயற்கை அறிவியலே அவர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்ததால் அவர்களுடைய கருத்துக்களில் இயல்பாகவே அறிவியல் மணம் கமழ்கிறது எனலாம். இது பற்றிய கருத்துக்களை மேலும் உறுதிசெய்ய வள்ளுவத்தை அறிவியல் கண் கொண்டு அலசிப்பார்ப்போம்.

# புதிய யுகத்தின் பிள்ளையார் சுழி

டாக்டர் ம.ரா.போ.குருசாமி

உயிரினம் தோன்றிய காலத்திலிருந்து போட்டியும், பேராட்டமும் இருந்துவருகின்றன. போட்டி உணர்ச்சியின் வெளிப்பாடாக நடக்கும். போராட்டங்களெல்லாம் வன்முறை அடிப்படையிலேயே நடப்பதும் இயற்கைதான் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

நடைமுறை வாழ்க்கையில் வன்முறைப் போராட்டத்துக்கே மனித சமுதாயம் இடம் கொடுத்திருப்பதாக இலக்கியங்களும் தெரிவிப்பதாக நம்புகிறோம்.

ஒருவனை ஒருவன்
அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று; இவ்
உலகத்து இயற்கை

என்று பாடுகிறது புறநானூற்றுப் பாடல். 'ஒருவனை மற்றொருவன் கொல்லுதலும், போராட்டத்தில் ஒருவன் தோற்பதும் (மற்றவன் வெல்வதும்) ஒன்றும் புதுமை இல்லை. இந்த உலகத்தின் இயற்கையான போக்குத்தான்' என்பது மேலே குறித்த பாடல் வரிகளின் கருத்து. புறநானூறு மட்டுமல்லாமல், 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்று அஹிம்சையைச் சிறப்பிக்கிற திருக்குறளும் போர்கள்பற்றியும் போராட்டங்கள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசுகிறது.

படைகுடி கூழ் அமைச்சு
நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள்
ஏறு.

இந்தக் குறளில் அரச அங்கங்கள் இவை என ஆறு அங்கங்கள் குறிக்கப்படுகின்றன. ஆறிலே முதல் படைக்கே தரப்படுகிறது. பின்னர்த்தனியாக அரண், படைமாட்சி.... எனப் பல முழு அதிகாரங்களில் அரசுக்கு இன்றியமையாதது என்ற கருத்திலே வன்முறைப் போர்ச் சூழலைத் திருக்குறள் விளக்குகின்றது.

தனிமனிதன் போர்க்களத்திலே அஞ்சாமை கொண்ட போராளியாக இருக்க வேண்டிய நிலைமையையும் திருக்குறள் பேசுகிறது. தனிவாழ்வு மட்டுமன்றி நாடு தழுவிய பொதுவாழ்க்கையும் வன்முறைப் போருக்கு இடம் தருவதாகவே திருக்குறளின் பொருட்பால் விரித்துப் பேசுகிறது.

திருக்குறள் விளக்குகின்ற வன்முறைப் போராட்டம் பற்றிய ஆராய்ச்சியாக இந்தக் கட்டுரை எழுதப்படவில்லை. "வன்முறைப் போராட்டம் என்ற சிந்தனை மிகப் பழமையானது, தொன்றுதொட்டு அது மிகவும் இயற்கையானதாகவே கருதப்பட்டு வந்துள்ளது." என்ற கருத்தை நினைவூட்டு வதற்காகவே புறநானூற்றையும் திருக்குறளையும் சான்று காட்டினேன்.

நம்முடைய சமய மரபும்கூட வன்முறைப் போராட்டத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது என்று சொன்னாலும் கடுமையாக எதிர்ப்பதற்கில்லை. படைக்கலங்கள் பலவற்றைத் தாங்கினவையாகவே நம் தெய்வங்களின் உருவங்கள் படைக்கப்பட்டுள்ளன. புராணக் கதைகளிலே மிகப் பெரும்பாலானவை தெய்வங்களே முன்னின்று செய்த போர்களை விளக்குகின்றவையே.

இலக்கிய அரங்கும், சமய அரங்கும் வன்முறைப் போர்களை - கொலைக் கருவிகளின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றுகளைத் தருகின்றன.

இந்தப் பண்பு அல்லது இந்தக் குறை - ஏதோ - நம்நாட்டில் மட்டுமோ, நம் நாட்டுச் சமயங்களில் மட்டுமோ இருப்பதாக எண்ணிக்கொள்ள வேண்டியதில்லை. அந்த எண்ணத்திலே திளைத்துப் பெருமை கொள்ளவோ அல்லது அந்த எண்ணத்தை நினைத்துக் களைத்துச் சிறுமை கொள்ளவோ தேவையில்லை. ஏனென்றால், உலகத்து நாடுகள் அனைத்திலுமே இந்தச் செய்தியைத்தான் காணுகின்றோம்.

எனவே, ஆயுதங்கள் ஏந்திப் போராடும் வன்முறை மனித இனத்தின் சிறப்பு என்றால், எல்லா நாட்டு மனிதர்களுக்கும் இந்தச் சிறப்பிலே பங்கு உண்டு அல்லது வன்முறை மனித

இனத்தின் சிறுமை என்றால், இந்தச் சிறுமையிலும் எல்லா நாட்டு மனிதர்களுக்கும் பங்கு உண்டு.

வன்முறைப் போர்கள் காரணமாக மனிதகுலம் - மனிதப் பண்பு முன்னேறியுள்ளதா. வளர்ந்திருக்கிறதா? இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடையை வைத்துத்தான், வன்முறைப் போர்களின் நிலையைப்பற்றி நாம் கணித்தறிய வேண்டும். அந்தக் கணிப்பைக் கொண்டுதான் மனிதன் தன் போர்முறை பற்றிப் பெருமை கொள்வதா, சிறுமை கொள்வதா என முடிவு செய்யவேண்டும்.

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்' என்கிறது தொல்காப்பியம், எல்லா உயிர்களுமே இன்பத்தை விரும்பித்தான் வாழ்கின்றன என்பது இந்தச் சூத்திரத்தின் சாரம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்டது என்பதனால், இந்தக் கருத்து இன்றைக்குப் பொருந்தாது என்று சொல்லிவிட முடியாதல்லவா? எல்லா உயிர்களுமே - மனிதன்மட்டு மல்லாமல் எல்லா உயிர்களும் இன்பமாக வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படுகின்றன.

சில கருத்துகள் பழமையாகப் பழமையாகப் பலம் இழந்துவிடும். வேறு சில கருத்துக்கள் பழமையாகப் பழமையாக முதிர்ச்சி அடையுமே தவிர, கிழடு ஆகிவிடுவதில்லை, உயிர்களின் ஆசை - விருப்பம் - நாட்டம் இன்பமே என்ற கருத்து முதிர்ச்சி உடையது. இன்றும் - ஏன் என்றுமே உண்மையானது.

ஆனால், உயிரினங்கள் வளர்ச்சி நெறிப்பட அமைந் திருக்குமானால், அதாவது வாழ்க்கையின் போக்கு இன்பத்தை எல்லா உயிர்களுக்கும் தந்திருக்குமானால், இந்தக் கருத்து மிகப் பழையதாய் - கிழடாய்ப் போயிருக்கும். வாழ்க்கை அப்படி முன்னேறவில்லை. ஆகையால் இந்தக் கருத்து இன்றும் வலிமை உடையதாகவே இருக்கிறது. மனித இனமும் மற்ற உயிரினங்களும் இன்னும் 'இன்பம் எங்கே இன்பம் எங்கே' என்று தேடிக்கொண்டுதான் இருக்கின்றன. இன்னமும் 'இன்பம்' என்பது எட்டிவிடாத இலட்சியமாகவே இருந்துவருகிறது.

காரணம் என்ன?

'எனக்கு இன்பம் வேண்டும்' என்ற நினைப்பு தனக்கு ஒரு குறுகிய வட்டத்தைப் படைத்துக்கொண்டது. 'என் இன்பத்துக்கு எது தடை, யார் தடை என்ற நினைப்பை ஊன்று கோலாகக் கொண்டு இன்பப் பயணம் நடக்கிறது. ஏதோ எவரோ தடை என்ற எதிர்மறை நினைப்பு இருப்பதால், உயிரினத்தின் நடைப் பயணத்திலே அச்சம், வெறுப்பு, பொறாமை முதலான எதிர்மறைப் பண்புகள் அழையா விருந்தாளிகளாகக் கூட்டாளிகளாக வந்து சேர்ந்துகொள்கின்றன. அதன்பின்' அமைதி எப்படி இருக்க முடியும். உள்ளேயும் அமைதி இல்லை, புறத்தேயும் அமைதி இல்லை. அமைதி - சாந்தி - இல்லாத இடத்தில் இன்பமும் இல்லை.

வினை விதைத்தால் தினை விளையாது, வினைதான் விளையும். அச்சம், வெறுப்பு, பொறாமை, பூசல் ..... இவற்றின் இனம் ஒன்று பத்து நூறு ஆயிரமாப் பெருக ஆசை கூடுகிறது. இன்பம் மேலும் மேலும் எட்டா வான விளிம்பாக மாறிக்கொண்டே போகிறது.

உயிரினத்தின் வாழ்வரங்கிலே துன்பமே அவல நாடகம் அமைத்துவிட்ட வரலாறு இதுதான்.

இலக்கியங்களிலும் சமய நூல்களிலும் அரசியல் சாத்திரங்களிலும் உயிரினத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் பகைமையே மேலோங்குவதற்கு இதுதான் காரணம். வெறுப்புக்கு இடம் கொடுத்தபின் வன்முறை தானே வந்து சேர்ந்துவிட்டது. மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் வாழ்க்கை நடவடிக்கைகளிலே வன்முறை இடம் பெற்றுவிட்டது.

ஏனைய உயிரினங்களைவிட மனித இனம் மிக உயர்ந்தது. இப்படி விஞ்ஞானமும் சொல்கிறது. அறிவுலகின் மற்றப் பிரிவுகளும் சொல்கின்றன. இந்த உயர்வெல்லாம் கருவிகளின் வ்ளர்ச்சியில் தெரிகின்றனவே தவிர, மனப் பண்பின் வளர்ச்சியிலே தெரியவில்லை. மனவளம் இருந்தால், இன்ப நாட்டம் எல்லா உயிர்க்கும் உண்டு. அந்த நாட்டத்துக்கு எதுவும் எவரும் தடையாக இருக்கக்கூடாது என்ற பண்பாட்டைக்

கொண்ட மனவளம் இருந்தால் - மனிதனுக்கு மனிதன் எதிரியாக இருக்க முடியாது. மனிதன் எந்த உயிர்க்கும் எதிரியாக இருக்கமாட்டான்.

தன் ஊன் பெருக்குதற்குப் பிற ஊன் தேடும் கொடுமை - தான் நன்றாக இருக்க அடுத்தவனுக்கு ஊறு தேடும் வஞ்சனை.... மனவளம் இல்லை என்பதை உணர்வதற்கு இவை சில சான்றுகள்.

இந்த எதிர்மறை உணர்வுகள் உயிரினங்களிடையே நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகின்றன. ஆதலால்தான், மிகப் பழைய இலக்கியங்களிலும் வன்முறைப் போராட்டம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த எதிர்மறை உணர்வுகள் இன்றும் வலிமையாக இருக்கின்றன. ஆதலால்தான், இன்னமும் வன்முறை வழிகள் வாழ்வரங்கிலே கணப்படுகின்றன.

வெறுங்கல் கவண்கல் ஆயிற்று, கவன் கல்லை வில் - அம்பு விழுங்கியது. வில் - அம்பைத் தோற்கடித்தது துப்பாக்கி, துப்பாக்கியைச் சீரனித்தது பீரங்கி, பீரங்கியை விழுங்கி ஏப்பம் விட்டது ஏவுகணை, ஏவுகணை அணுக்குண்டுக்கு முன் பல்லை இளித்தது. அணுக்குண்டுகளின் வளர்ச்சி விண்வெளிப் போராக மாறிவருகிறது.

சாதாரணமான அணுக்குண்டே உலக உருண்டையை உருத்திரன் ஊழிக் கூத்துக்கு ஏற்ற சுடலை ஆக்கிவிட முடியும் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர். அரசியல் தலைகளும் ஆமாம் என்று ஆடுகின்றன. என்றாலும் அணுக்குண்டு ஆராய்ச்சி வளர்ச்சியிலும், 'அதைவிட இது, முன்னைவிடப் பின்னையது அழிவாற்றல் மிக்கது.....' என்ற போக்கிலே அணு ஆயுத உற்பத்திப் போட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஏறுமுக வளர்ச்சி பெற்றுக்கொண்டே போகிறது. உலகிலேயே செல்வமிக்க நாடு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் அமெரிக்க நாட்டிலே மில்லியன் கணக்கான மனித உயிர்கள் உணவின்றித் திண்டாடுகின்றனர். ஒண்டக் கூரையின்றித் திறந்த வெளிக்குளிரிலே விறைத்துச் சாகிறார்கள். மனித உயிர் தேய்ந்தாலும், அந்த நாட்டிலே அணுக்கருவி உற்பத்தியிலே தேய்வோ ஓய்வோ கிடையாது.

மத்திய கிழக்கு நாடுகளிலே - பாரத நாட்டுப் பாஞ்சாலத்திலே - அளவிலே துளியாக இருந்தாலும் அழிவுப் போராட்டக் கொலை வெறியியே எவரெஸ்டாக விக்கிராமவதாரம் கொள்ளும் இலங்கை.... அங்கிங்கு எனாதபடி எங்கணும் பெருவழக்காய் வெறுப்பும் எரிப்புமாய் - போரும் கொலையுமாய் மனித இனம் வெறிப் பேரினமாகக் காட்சி அளிக்கிறது.

இனி மேலும் இந்த வன்முறையை நம்பி வாழ முடியுமா? வளர முடியுமா?

மனித இனம் தனக்குத்தானே எழுப்பிக்கொண்டிருக்கிற வினா அன்று இது. அலுத்துக்களைத்தும் ஆத்திர வெளியின் உச்சாணிக் கிளையிலே ஆட்டம் போட முடியாமல் - அதே சமயத்தில் அணுவையும் பிளந்துகொண்டிருக்கிற மனிதனுக்கு முன் வரலாறு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிற வினா இது.

மனித இனத்தின்முன் இன்று எழுந்து நிற்கிற இந்த வினாவைத்தான் காந்தியடிகளின் அந்தராத்மா என்றோ அவருக்குத் தனிக் காட்சியாக எழுப்பிவிட்டது. வன்முறையை வன்முறையால் முடித்துவிடுவது என்பது, பெட்ரோலை ஊற்றி ஊர் நெருப்பை அவிக்க முயல்வதைப் போன்றது.

வெறுப்பை அதனைச் சேர்ந்த எதிர்மறை உணர்வுகளால் பெருக்க முடியுமே தவிர, அழிக்க முடியாது. எதிர்மறை உணர்வுகளுக்கு மாற்று உடன்பாட்டு உணர்வுகள்தான். பகைமையை அன்பு வெல்லும், அருள் மாற்றும்.

இந்த உண்மையும் பழையதுதான். முதிர்ந்து கனிந்ததுதான். ஆனால், வெறிகொண்டு ஆடும் உணர்ச்சிச் சூழலிலே தட்டுப்படவில்லை.

அறத்திற்கே அன்புசார்பு
என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே
துணை

ஆம், மறத்தை மாற்றுவதற்கும் அன்புதான் துணை எனபது அறிவுடையார் கருத்து.

மரம்சா மருந்தும்
கொள்ளார்
உரம்சாச் செய்யார்
உறுதவம்

உயிரையே காப்பாற்றும் மருந்துக்காகக்கூட மரத்தை அழித்து வேர் மருந்து அருந்த மாட்டார்கள். உடல் வலிமையை அழித்துக்கொண்டு பெரிய தவத்தைச் செய்யமாட்டார்கள். இது பூங்குன்றனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காட்டிய அஹிம்சைத் தவம்.

சூரனை அழிக்காமல் அவன் பகைமையை அழித்தவன் முருகன், அந்த முருகனைச் சேவகப் பெருமாள் என்பது தமிழர் சமய மரபு (சேவகன் : வீரன். சேவகப்பெருமாள்; வீரருள் தலைவன்)

உற்றநோய் நோன்றல்
உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு
உரு

என்று சத்தியாக்கிரக - அஹிம்சைத் தவத்தை விளக்கினார் வள்ளுவர்.

அன்பு நெறி தழைக்கத் தக்க ஆக்கநெறிச் சூழல் உருவாகாத காலத்திலேயே நம் சிந்தனைச் செல்வர்கள் - சமயச் சான்றோர்கள் வன்முறைக்கு எதிரான நன்முறையை - மனவளப் பெருக்கைச் சுட்டிச் சென்றார்கள்.

இன்று - அணுக்குண்டு விண்ணும், மண்ணும் விழுங்கி, ஓங்கி உயர்ந்து மனிதனையே வினாக்குறியாக்கிவிட்டுள்ளது இன்று - மனித இனம் புதிய காட்சியைக் காணவேண்டியிருக்கிறது.

அந்தக் காட்சியின் பிள்ளையார் சுழிதான் காந்தியடிகளின் தோற்றம்.

# பெண்ணின் பெருமை

*பேராசிரியர் கி. இளங்கோவன்*

"செருமானியப் பெருங்கவிஞர் கதே" (Goethe) சாகுந்தல நாடகத்தைப் போற்றியுரைத்த புகழ் மொழி முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்கும் முழுதும் ஏற்புடைத்தாகும். மனிதப் பெண்ணாகத் தோன்றிய கண்ணகி மனித குலமே தொழத்தக்க தெய்வமகளாய் வளர்ந்த வரலாற்றை வன்மைசேர் தமிழால் பாடுகின்ற இக்காப்பியத்தில் கண்ணகியின் மனித இயல்பு எங்கே முடிகிறது. தெய்வ இயல்பு எங்கே தொடங்குகிறது என்று நாம் பிரித்துணர முடிவதில்லை. சுருங்கக் கூறின் மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலமாய்க் கண்ணகியின் வாழ்க்கையைக் கவினுறப் புனைகிறது இக்காப்பியம்.

மண்ணிலே தோன்றும் கொடி விண்ணை நோக்கிப் படர்ந்து கண்ணைக் கவரும் மலர்களை வழங்குகிறது. கொடியின் அழகிலேயே குழைந்து நிற்போரும், மலர்களைக் கண்டு மயங்கிடுவர், மலர்களையும் அவற்றில் தோன்றுகின்ற காய்கனிகளையும் எண்ணிக்களிப்போரும் மிகப் பலரிப்பர். எவரேனும் ஒருவர் "நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்" (குறள் 959) என்னும் முதுமொழியை நினைந்து கொடியின் இயல்பு கொண்டு, கொடி தோன்றிய மண்ணின் வளத்தை மதிப்பிட முற்படாமல் இரார்.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் கலை எழிலையும், காப்பிய மாந்தரின் பண்பு நலன்களையும், மொழி அழகையும், இசை இனிமையையும், வழிய நிற்கும் நாடகச் சுவையையும், தாமும் இன்புறக்கண்டு, பிறர்க்கும் ஏற்றமுற விண்டுரைக்கும் ஆய்வாளர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். காப்பியச் சிலம்பு தன் விளை நிலத்தைத் தன் பிறப்பிடமாகிய அன்றைய தமிழ்ச் சமுதாயத்தைச் சாதி, திருமணம் என்ற இரு கோணத்தால் எந்த அளவிற்கு எடுத்துக் காட்டுகிறது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

"இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி" என்றும் "மொழியின் வாயிலாக வாழ்க்கையினைச் சித்திரிப்பது இலக்கியம்" என்றும் ஹட்சன் கூறுவர்.

இத்தகு நிலையில் புலவன் தன்னையுமறியாமல் அக்காலத்துச் சமுதாயத்தின் நிலையையும் எடுத்துக்கூறிச் செல்கிறான். சிலப்பதிகாரம் என்பது செந்தமிழ் இலக்கியங்களுள் மிக்க தொன்மையும், சிறப்பையும் பெற்ற பேரிலக்கியமாகும்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டு மென்பதூஉம்"

ஆகிய இம்மூன்று நீதிகளையும் அடிப்படையாகக் கொண்டு இளங்கோவடிகள் முத்தமிழைக் கரம்பிடித்து முந்நாட்டை வலம் வந்து, மூவரசர் திறம் கண்டு, முக்காலத்தையும் உணரும் வகையால் எழுதினார் என்றாலும் சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் நிலையில்தான் உள்ளது.

"சிலப்பதிகாரம் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பயனற்றதாகக் காணப்படுகிறது. சிலப்பதிகாரமும் அது போன்ற மற்றைய நூல்களும் வெறும் கதைகளைக் கூறுவனவாக உள்ளன" என்று கே.வி.சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார்.

ஆயின் "கோவலன் கண்ணகியின் கதையைக் கூறும் முகத்தான், தமிழகத்தின் வாழ்க்கையையும், பண்பாட்டையும் இக்காவியத்தில் அடிகள் விளங்கச் செய்தலைக் காண்கிறோம்".

சிலப்பதிகாரம் சங்க காலத்திற்கும், சங்கம் மருவிய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த நூல் என்பர். இதனாலேயே சங்க காலத்து அரசியல் சமுதாய மரபுகளையும்,. பிற்கால அரசியல் சமுதாய வளர்ச்சிகளையும் சிலம்பில் காண முடிகிறது. பதிற்றுப்பத்து உட்படத் தொகை நூற்கள் சுட்டுகின்ற சேரநாட்டு அரசியலில் ஒரு காலத்துப் பல்வேறு சேர மன்னர்கள் வெவ்வேறு பகுதிகளில் ஆண்ட காட்சியைக் காண்கிறோம். பாண்டிய நாட்டில் பல்வேறு பாண்டியர்களும், சோழ நாட்டில் பல்வேறு சோழர்களும் ஒரே காலத்தில் வாழ்ந்து இருக்கின்றனர்.

ஆனால் சிலப்பதிகாரச் சேர நாட்டில் செங்குட்டுவனும், பாண்டிய நாட்டில் பாண்டியன் நெடுஞ்செழியனும், சோழநாட்டில் சோழன் ஒருவனும் (யாவன் என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்று) ஆண்டிருக்கின்றனர். வடவர் சோழ - பாண்டியரைப் பழித்தபோதும், சேரமன்னன் படையெடுத்து வடவரை வென்ற நிகழ்வு, தமிழ் நாட்டின் மன்னரிடையே ஏற்பட்ட ஒருமைப்பாட்டு எண்ணம், சங்க காலத்தில் இல்லாத பண்பு வளர்ந்ததையே காட்டுகிறது. மேலும் தமிழக மன்னர்கள் ஒற்றுமையின்றிப் போரிட்டதனைப் புலவர் வெறுத்தனர் என்பதனை மூவேந்தர்களும் சில வேளைகளில் ஒருங்கிருந்தபோழ்து,

"இன்றே போல்க நும் புணர்ச்சி" (புறநானூற்றுப் பாடல் 58)

என அவர்கள் வாழ்த்துவதிலிருந்து அறியலாம்.

புலவரிடையே இருந்த இவ்வரசியல் ஒருமைப்பாட்டுணர்வு (புறநானூற்றுப்பாடல் - 367) சங்க காலப் புரவலரிடையே இருந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் சிலப்பதிகாரச் செங்குட்டுவன் சோழ, பாண்டியருக்கு நேர்ந்த பழியைத் தனக்கு நேர்ந்த பழியாகக் கொண்டான் என்பதை

"இமையத் தாபதர் எமக்கு ஈங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவது ஆயின், ஆங்கு அஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தருஉம்"

(கால்கோட் காதை)

என்னும் அவருடைய நெடுமொழியால் அறிகிறோம்.

சேர நாட்டிற்குள்ளே நிலவிய வேற்றுமைகள் மட்டுமன்றித், தமிழக அரசியலில் நிலவிய வேற்றுமைகளும் சில வேளைகளிலேனும் மறையத் தலைப்பட்டன என்பதைனைச் சிலம்பால் அறிகிறோம். இது பற்றியே சிலப்பதிகாரத்தைத் தமிழ்நாட்டு ஒருமைப்பாட்டுக் காப்பியம் என உயர்த்துரைப்பாரும் (தெ.பொ.மீ. குடி மக்கள் காப்பியம்) உளர்.

மக்கள் வாழ்க்கை முறையிலும், ஒருபுறம் சங்ககால நிலைக்கும் சிலப்பதிகார நிலைக்கும் பெரிதும் ஒற்றுமையும்

மறுபுறம் சிறிதளவு வேற்றுமையும் காணப்படுகின்றன. நானில வாழ்க்கை முறை வருணனையில் தொகை நூற்களுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் ஒப்புமை உண்டு. நானிலப் பாகுபாடு தமிழர்களுக்கே உரிய சிறப்பு (Tamilan Antiquity) ஆகும்.

"முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்

சொல்லிய முறையான் சொல்லவும் படுமே" (தொல். அகத்திணை இயல் - 5

சங்க நூல்கள் நிலங்களையும், நிலங்களின் அடிப்படையில் எழுந்த ஒழுக்கங்களையும் பின்னணியாகக் கொண்டு எழுந்தனவே. தமிழன் ஊனோடும், உயிரோடும், ஊரித் தோய்ந்த இப்பாகுபாடு இளங்கோவடிகள் உள்ளத்தை விட்டகலவில்லை. ஐவகை நிலங்களையும், அவற்றில் மக்கள் வாழும் முறைகளையும் அவர் தம் கடவுட் கொள்கைகளையும் கதையோடு இணைத்துக் காட்டிய கவிஞர் பெருமான் இளங்கோவின் திறம் வியந்து போற்றுதற்குரியது.

தொடரும்

பதிப்பாசிரியர். இரா. சதாசிவம்

## பெருமைமிகு ஆசிரியர் குழு


பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116